உ



நவாலியைப் பிறப்பிடமாகவும்
மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# லயன்.சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

10.11.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நவாலியைப் பிறப்பிடமாகவும்,
மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# லயன். சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

10.11.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய், அன்பு நிறைந்த

பேரொளியாய், இன்சொல் பேசி,

அன்புடன் எங்கள் வாழ்வில் ஒளிவிளக்காய்

எம் எல்லோருக்கும் வழிகாட்டியாய்,

இவ்வுலகில் தலைநிமிர்ந்து

வாழ்வாங்கு வாழ்ந்த

எங்கள் குலதெய்வத்தின்

திருப்பாத மலர்களுக்கு

இம்மலரைக் காணிக்கையாகச்

சமர்ப்பிக்கின்றோம்



இங்ஙனம்,
குடும்பத்தினர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
22 - 04 - 1927

உதிர்வு
10 - 10 - 2010

# அமரர்
# லயன். சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்
**(B.Sc, Dip-in-Ed)**

## திதி நிர்ணயம்

ஆண்டு விகிர்தி புரட்டாதி பூர்வபட்ச சதுர்த்தி
வளர்பிறைத் திதியில் பாலகிருஷ்ணன் எனும் பண்புடையான்
சென்றடைந்தான் ஐங்கரன் தாள்
அவன் நாமம் வாழ்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

கோணிய பிறை யணிந்த கோமான் உமைபாலா?
மாணி கருள வேண்டி காலனை யுதைத்தனர்
வேணியான் திருமகனே! வேலனுக்கு முன் தோன்றலே!
வாணி போற்றும் விநாயக! வரமருள்வாய் உலகுய்ய.

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தனை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பண்சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்
பெண்சுமந்து பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்திவியன் மண்டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிக் கொண்டக்கோவான் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங் காணம்மானாய்.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகங் கழறவுழறி
உமைமண வாளனுக் காள்
பாரும் விசும்பு மறியும் பாரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்களின்

(B.Sc, Dip - in - Ed)

(முன்னாள் பிரதி அதிபர் – மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஆசிரியர் – கொக்குவில் இந்துக் கல்லூரி, ஆசிரியர் – மானிப்பாய் மகளிர் கல்லூரி, முன்னாள் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட இணைப்பாளர்)

# வாழ்க்கைச் சரிதம்

**உதயம் :**

இலங்காபுரியின் சிரமென விளங்கும் யாழ் நகரின் மருங்கே சைவமும் தமிழும் சால்புறத் தழைத்தோங்கும் நவாலி எனும் கிராமம் உள்ளது.

இக்கிராமம் வயலும் வயல் சார்ந்த நிலப்பிரதேசமாக விளங்கி, நன்செய், புன்செய் பயிர்களை உற்பத்தி செய்ய உதவும் நீர்நிலைகளாகிய குளங்களையும், கூவல்களையும் கொண்டதாகும்.

மக்களுக்கு அறிவையும் ஆன்மீகத்தையும் வழங்கும் நிலையங்களான பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது. அவற்றுள் நவாலி சிந்தாமணிப்பிள்ளையார், நவாலி அட்டகிரி முருகன், நவாலி சென்பீற்றேர்ஸ் தேவாலயமும், நவாலி மகாவித்தியாலயம், நவாலி சென்பீற்றேர்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையும் பிரசித்தி பெற்றவை.

சைவமுந்தமிழுந் தழைத்தோங்கிய நற்குடிச் சான்றோர்களை ஈன்றெடுத்த இம்மண்ணில் பலராலும் மதிக்கப்பட்ட "கலையரசு" சொர்ணலிங்கம் சிவபாக்கியம் தம்பதியினர் இல்லறமாம் நல்லறத்தை இனிது ஆற்றிவந்தனர்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு" என்பதற்கிணங்க இத்தம்பதிகளின் இல்லறப் பயனாக மூன்று மொட்டுக்கள் உதித்தன. லலிதா, சாரதா, பாலகிருஷ்ணன் என நாமகரணஞ் சூட்டப்பட்ட இம்மொட்டுக்கள் மலர்ந்து மலராகிப், பூவாகிக், காயாகி நிற்பதைக் கண்டு பெற்றோர் இறுமாந்திருந்தனர். இம்மொட்டுக்களில் மூன்றாவது மொட்டாக 1927ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை மாதம் 22ம் திகதி உதயமானவரே இச்சரிதத்தின் நாயகனாம் பாலகிருஷ்ணன் என்னும் பெருந்தகை.

## கல்வியும் தொழிலும் :

குழந்தையான பாலகிருஷ்ணன் சிறுவனாகி நவாலி சித்தாமணிப்பிள்ளையாரினதும், நவாலி சென்பீற்றேர்ஸ் மாதாவினதும் நல்லருளோடு தனது ஆரம்பக்கல்வியை நவாலி சென்பீற்றேர்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்றுத் தேறினார். கற்கும் காலங்களில் "விளையும் பயிரை முளையில் தெரியும் என்பது போல" கல்வியிலும், விளையாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டி போன்றவற்றிலும் பிற இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மிகவும் துடினமானவராகவும், ஆர்வமுள்ளவராகவும், அதிபர், ஆசிரியர்களால் போற்றப்பட்டவராகவும் காணப்பட்டார்.

பின்னர் இடைநிலைக்கல்வியை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கற்றார். இங்கும் அவர் கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் பலசாதனைகளைப் புரிந்து பலராலும் புகழப்பட்ட ஒருவராகக் காணப்பட்டார். தொடர்ந்து உயர்தரக்கல்வியை யாழ். பரியோவான் கல்லூரியிலும் (சென்ஜோன்ஸ் கல்லூரி) கற்று மிகச்சிறந்த மாணவனாகத் திகழ்ந்தார். ஆங்கிலத்துறையில் சிறந்த மாணவர்களாகத் திகழ்ந்தவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு துடுப்பாட்டத்திலும் (கிரிக்கெற்) சிறந்து விளங்கி கல்லூரிக்கு பெருமை தேடிக்கொடுத்தவர் என்றால் மிகையாகாது. இவர் கல்வி கற்ற காலத்தில் வடமாகாணத்தில் உள்ள பல கல்லூரிகளோடு துடுப்பாட்டப் போட்டிகளில் ஈடுபட்டு வெற்றி கொண்ட பெருமையில் இவரது பங்கும் காத்திரமானதாகும். துடுப்பாட்டத்தில் மிகுந்த ஆர்வமும் ஊக்கமும் கொண்டவர். இவரது ஆர்வத்தைக் கண்டு பெற்றோர்கள் ஊக்கமளித்ததோடு, கல்லூரி அதிபர் ஆசிரியர்களும் உற்சாகமும், ஒத்தாசையும் வழங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து தனது மேற்படிப்புக்காக மற்ராஸ் கிறிஸ்தவக்கல்லூரியில் இணைந்து விஞ்ஞானமானி (B.Sc) கற்கைநெறியினை மிகவும் ஆர்வத்தோடு கற்று சிறந்தமாணவனாகத் திகழ்ந்து விலங்கியலில் சிறப்புப்பட்டம் B.Sc (Hons) Zoology (SP) பெற்றார். இங்கும் தனது துடுப்பாட்டத்திறமையை வெளிக்காட்டத் தவறவில்லை. தனது பட்டப்படிப்பை சிறப்பாக முடித்தபின்னர் தாயகம் திரும்பி தனது சொந்த மண்ணான கொக்குவில் இந்துக்கல்லூரியில் விலங்கியல்துறை ஆசிரியராக நியமனம் பெற்று சிறந்த சேவையாற்றினார். கற்பித்த காலத்தில் விலங்கியல்துறையில் பல மாணவர்கள் சிறப்புடன் தேர்ச்சிபெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியமை சிறப்பம்சமாகும். தனது பாடத்துறைக்கு புறம்பாக விளையாட்டுத்துறையிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்தார். அத்தோடு விளையாட்டுத்துறைக்கு பொறுப்பான ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார். இவர் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்ட காலம் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு ஒரு பொற்காலமாக அமைந்தது. விளையாட்டுத்துறை சகலவற்றிலும் வடமாகாணத்தில் ஏன் இலங்கையில் கூட தனது திறமையை இக்கல்லூரி வெளிக்காட்டியமை இவரது அயராத முயற்சியிலும், மாணவர்கள் இவர்மேல் வைத்த நன்மதிப்பும், சக ஆசிரியர்கள் அதிபர் போன்றோர் இவர் மேல் வைத்த அன்பும் நம்பிக்கையுமே காரணம் எனலாம். பாடசாலை விட்ட பின்பும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகக்ள் எடுப்பதும், மைதானத்தில் மாணவர்களுக்கு பயிற்சி அனிப்பதுமே தனது தலையாய கடமையாக தினமும் ஈடுபட்டார்.

## திருமணமும் குடும்ப வாழ்க்கையும் :

நல்லாசிரியராக சேவையாற்றிவந்த அமரர் அவர்களை இல்லறவாழ்வில் ஈடுபடுத்துங் காலங்கனியவே கல்விமான்கள், கடவுள் பக்தியில் மிகுந்தவர்கள், தனவந்தர்கள் வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புடையதும், நீர்வளமும், நிலவளமும் பொருந்திய புகழ் பூத்த ஊர் மானிப்பாய் ஆகும். இக்கிராமத்தில் வேண்டுவோர் வேண்டும் வரங்களைக் கொடுத்தருளும் மருதடி விநாயகரும், வேலக்கை முருகனும், அந்தோனியாரும் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆலயங்களிற்கு அருகாமையில் வசித்து வந்த லோட்டன் இராஜரட்ணம் – இரத்தினமணி தம்பதியினரின் ஏக புதல்வியாகிய அன்னலட்சுமி என்பவரை 25.06.1960ம் ஆண்டு திருமணம் செய்தார்.

அக்காலத்தில் லோட்டன் குடும்பம் புகழ் பூத்த குடும்பமாகத் திகழ்ந்தது. அமரர் லோட்டன் இராஜரட்ணம் அவர்களது நினைவாகவே இன்றும் "லோட்டன் வீதி" அமைந்திருப்பதைக் காணலாம்.

நல்லறமாம் இல்லறத்தில் தன் துணைவியாம் அன்னலட்சுமியுடன் (தங்கா) முகனமர்ந்து இன்சொல் பேசி, செல்விருந்தோம்பி, வருவிருந்து பார்த்து தமது சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். தொடர்ந்து ஆசிரியப்பணியில் ஈடுபட்டு வந்த அமரர் அவர்கள் தனது புகுந்த ஊரான மானிப்பாயில் உள்ள மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வரும் வரை கொக்குவில் இந்துக்கல்லூரியில் புகழ்பூத்த சிரேஷ்ட ஆசிரியராகக் கிட்டத்தட்ட 22 வருடங்கள் சேவையாற்றினார்.

மானிப்பாய் மகளிர்கல்லூரியில் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராக சிறப்பான சேவையாற்றி வருங்காலத்தில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பயின்று Dip. in. Ed பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். சிலகாலம் இக்கல்லூரியில் சேவையாற்றியபின் அருகாமையில் உள்ள தான் கற்ற கல்லூரியான மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று அங்கு பிரதி அதிபராகக் கடமையாற்றினார். அவரது நிமிர்ந்த நடை, நேரிய பார்வை போன்றன மாணவர்களது உள்ளங்களிலும், சக ஆசிரியர்கள், பெற்றோர்களது மனதிலும் நீங்காத இடத்தினைப் பெற்றுவிட்டன. மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத்துறையிலும் மிகுந்த ஆர்வம் காட்டுபவராக அமரர் திகழ்ந்தார். வறிய மாணவர்கள் சப்பாத்து இன்றி கல்லூரிக்கு வந்தால் அவர்களை விசாரித்து தனது சொந்தப்பணத்தில் அவற்றினை வாங்கிக் கொடுத்து திருப்தி அடைவார். அமரர் பாலகிருஷ்ணன் அவர்கள் கலை, பண்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றுபவராக விளங்கினார். அன்றைய ஆசிரியர்களின் சின்னமாக மிளிர்ந்தார். ஆங்கிலத்தில் மிகுந்த புலமை பெற்றவராகத் திகழ்ந்தது மட்டுமல்லாமல் மாணவர்களுக்கும் ஆங்கிலத்தின் தேவையை உணர்த்தியவராவர். அவரது உயரமான தோற்றமும். தூய வெண்நிற உடையும் இன்றும் எம் கண்கள் முன் தெரிகின்றன. இந்துக்கல்லூரியில் மட்டுமல்ல அயல்பாடசாலைகளிலுமுள்ள மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சியினை மேற் கொள்ளும் திறன் பெற்றவர். எந்த ஒரு விளையாட்டுப்போட்டி களிலும் அவரைக் காணலாம். மனம் சளைக்காது இறுதிவரை நின்று வெற்றிகரமாக நிறைவேற்றி வைப்பார். விளையாட்டுத் துறையில் அவருக்கு தெரியாத விதிகள் ஒன்றுமில்லை என்றே கூறலாம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் தனது தன்னிகரில்லாத சேவையினை நிலைநாட்டியவர். உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற துறைகளில் மாவட்ட, மாகாண மட்டங்களிலும், அகில இலங்கை ரீதியாகவும் வெற்றிகளைக் குவிக்க அயராது பாடுபட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றவர். அமரர் அவர்கள் 1986ம் ஆண்டு தனது அரச ஆசிரியர்சேவையில் இருந்து ஓய்வுபெற்றார்.

ஓய்வு பெற்றும் தனது கல்லூரியில் மிகுந்த பற்றுக் கொண்டவர் அடிக்கடி கல்லூரிக்குச் சென்று நிலமைகளைக் கேட்டறிந்து ஆலோசனைகளை வழங்குவார். அத்தோடு கல்லூரி முடிந்தவுடன் இரவு 7 மணிவரை மைதானத்தில் தானே நேரடியாக நின்று ஆலோசனையோடு கூடிய பயிற்சியினை மாணவர்களுக்கு வழங்குவார். அமரர் அவர்கள் கற்பிக்கும் காலங்களில் கற்றமாணவர்கள் பலர் இன்றும் இலங்கையில் பல பாகங்களிலும் உள்ள வைத்தியசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும், யாழ் போதனா வைத்தியசாலையிலும் வைத்திய நிபுணர்களாக இன்றும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

அமரர் பாலகிருஷ்ணன் அவர்கள் மிகவும் அடக்கமானவர், எளிமையானவர், சீறிச்சினந்து பேசத் தெரியாதவர் "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" என்பதற்கியைய வரிசை தெரிந்து மதிப்பினைச் செய்யும் பண்பாளர். "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்" என்பதற்கிணங்க தம்மால் ஆற்றக்கூடிய அறிவு புகட்டும் கருமத்தைச் செய்து வாழ்ந்தார்.

## பொதுப்பணியும், சமயப்பணியும் :

இல்லற வாழ்வில் மட்டுமன்றி அன்னார் பல சமய சமூகப்பணிகளிலும் தன்னை இணைத்து அயராது உழைத்த பெருமகனாவார்.

சமயப்பணி என்று கூறுகின்றபோது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவ தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழாவின் போதும் ஆலய சூழலில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து அடியார்களுக்கு தாகசாந்தி செய்ய ஏற்பாடு செய்வார். தானே முன்னின்று காலையில் இருந்து மதியம் வரை தண்ணீர்ப்பந்தலில் சேவையாற்றுவார். அத்தோடு கிராமத்தில் உள்ள ஆலய உற்சவ காலத்தின் போது தாகசாந்திக்கான ஏற்பாடுகளை மிகவும் சிறப்பாகச் செய்வார். ஆலய உள்வீதி, வெளிவீதிகளை துப்பரவு செய்தல் இவரது தலையாயய கடமையாகும். அமரர் அமரத்துவமடையும் வரையும் தனது குலதெய்வமான நவாலி சிந்தாமணிப் பிள்ளையாரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காலை சென்று வழிபடுவது வழக்கமாகக் கொள்வார். ஆலயங்களில் திருவிழாக்களை மிகவும் சிறப்பாகச் செய்வார். எவரையும் இன்முகத்துடன் வரவேற்கும் பண்பாளர். அன்பு, அடக்கம், பொறுமை என்பன இவருக்கு அணிகலன்களாகத் திகழ்ந்தமையினால் இவரது சமயப்பணி மென்மேலும் சிறப்புப் பெற்றது என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்களது பொதுப்பணி என நோக்கும் போது ஆசிரியர் நியமனம் கிடைத்த காலத்தில் இருந்தே தனது பணியினை ஆடம்பரமின்றி மிக அமைதியாகச் செய்து வந்துள்ளார். குறிப்பாக வறிய மாணவர்களுக்கு சப்பாத்து, அப்பியாசக் கொப்பிகள், உடுப்புக்கள், பயிற்சிப்புத்தகங்கள் போன்றவற்றை வாங்கிக் கொடுத்து மாணாக்கரது மனதில் இடம்பிடித்து மட்டுமல்லாமல் இவர்களுக்கான பாடசாலை வசதிக்கட்டணத்தை தானே அலுவலகத்தில் கட்டிவிட்டு மாணவர்களுக்குப் பற்றுச்சீட்டைக் கொடுப்பார். கல்லூரியில் கல்வி கற்பிக்கும் காலத்தில் விளையாட்டுத்துறைக்குத் தேவையான பல உபகரணங்களை அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1987ம் ஆண்டு மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலேயே அவர் இணைந்து அதில் முதலாவது செயலாளராக இருந்து மிகவும் திறம்பட வழிநடாத்திய பெருமை அவரைச் சாரும். அமரர் அவர்கள் தனது கழகத்திற்கு மட்டுமல்ல பிற கழகங்களுக்கும் தன்னால் ஆன உதவிகளைச் செய்துள்ளார். வறிய குடும்பங்களை இனம்கண்டு தானே நேரடியாக அவர்களது வீட்டுக்குச் சென்று அவர்களுக்கு தன்னால் ஆன உதவிகளைச் செய்வதோடு, கழகத்தினூடாகவும் பல உதவிகள் கிடைக்க ஆவன செய்வார். லயன். பாலா என்றால் தெரியாதவர்கள் இல்லை என்றே கூறலாம். மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தைக் கட்டி எழுப்பினது மட்டுமல்லாமல் அக் கழகத்துக்கு என ஒரு கட்டுக்கோப்பினையும் தக்க வைத்த பெருமை அவரைச் சாரும். கழக அங்கத்தவர்களுக்கு கழக செயற்பாடுகள் பற்றியும் லயன்ஸ் கழக விதிகள் பற்றியும் அடிக்கடி அறிவுரை கூறுவார். அவரது ஆற்றல், அனுபவம், திறமை, நடத்தை போன்றன அவரது மிடுக்கான நடைக்கு அணி சேர்ப்பதாக அமைந்திருந்தன. அமரர் மானிப்பாயில் உள்ள படித்த இளையர்களை ஒன்றிணைத்து லியோ கழகத்தை உருவாக்கி வழிநடத்தினார். அவரது துடிப்பான செயற்பாட்டினைக் கண்ட மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழக பணிப்பாளர்சபை லியோ கழகத்தின் ஆலோசகராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமித்தமை மென்மேலும் அக்கழகம் வளர உந்துசக்தியாக இருந்தது. ஒழுக்கக்கட்டுப்பாடு, நேர்மை, நேரம் தவறாமை போன்ற செயற்பாடுகள் அவரால் கண்டிப்பாக நடைமுறைப் படுத்தப்பட்ட விடயங்கள் எனலாம். அவரது செயற்பாடுகளின் வளர்ச்சியால் மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தில் இருந்து ஒரு அங்கத்தவர் சர்வதேச லியோகழகங்களின் 306 – $B_1$ மாவட்ட ஆளுநர் அவர்களால் லியோ கழகங்களின் மாவட்டத் தலைவராக முதல்முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அத்தோடு அமரர் அவர்களை சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 B–1 மாவட்ட ஆளுநர் அவர்கள் லியோ கழகங்களின் மாவட்ட இணைப்பாளராக நியமித்து கௌரவப்படுத்தியமை விசேட அம்சமாகும். இப்பதவியினைத் திறம்பட செய்தமையினால் கிட்டத்தட்ட ஐந்து வருடங்களுக்கு மேல் இப்பதவியினை வகித்து பல பாடசாலைகளில் லியோ கழகங்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். இதனால் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் தலைவர்களிடமிருந்தும், மாவட்ட ஆளுநர்களிடம் இருந்தும் பல விருதுகளையும், சான்றிதழ்களையும் பெற்ற பெருமை இவருக்கு உண்டு.

ஆங்கிலப் புலமையில் மிகத் தேர்ச்சி பெற்ற அமரர் அவர்கள் கூட்டங்களை நடாத்தும் போது ஆங்கிலத்தில் நடாத்துமாறும், எவ்வாறு நடத்த வேண்டும் என்று அறிவுரை கூறுவார்.

இவர் அமரத்துவம் அடையும்வரை லயன்ஸ் கழக சிரேஷ்ட அங்கத்தவராக இருந்து பல அரிய சேவைகளை ஆற்றி சகலரது மனங்களிலும் இடம்பிடித்துள்ளார். இவரது சேவைக்காலம் மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்திற்கு ஒரு "பொற்காலமாக" அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. இவரது சமூகப்பணி பலரது பாராட்டுக்களையும் பெற்றது மட்டுமல்லாமல் அமரர் என்றும் மக்கள் மனங்களில் நிலைத்திருக்கும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

அமரர் அவர்கள் 2010.10.10ம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் நிட்டையிலா உடலினை நீத்துச் சிட்டன் சிவலோக நாயகன் திருவடிக்கீழ் சேர்வதற்கு உரியரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்து இவ்வுலகு" என்னும் குறள் இவ்வுலக வாழ்வின் சிறுமையைப் பெருமையாகக் கூறுவதன் மூலம் நம்மை உணரவைக்கின்றது.

பிறந்தவர் அனைவரும் இறத்தல் நியதி. உலகில் வாழும் வகை தெரிந்து வாழ்பவர் சிலரே. அவ்வகையில் வாழ்ந்து சென்றவர்களை இன்னும் வாழ்ந்து கொண்டிருப்போர் அவ்வப்போது நினைந்து கொள்வதனால் தம் வாழ்வினையும் செந்நெறியில் செலுத்தித் தாமும் உயர்வடைவர் என்பது ஆன்றோர் அனுபவம்.

எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி மிகவும் எளிமையாக வாழ்ந்து எல்லோரையும் தனது அன்பாலும், ஆதரவாலும் கவர்ந்து கொண்ட பாலகிருஷ்ணன் என்னும் பெருமரம் தனது மனைவி, சகோதரர்கள், குடும்பத்தவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் தவிக்கவிட்டுச் சாய்ந்த போதிலும் அவர் விட்டுச்சென்ற விழுதுகள் அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வார்கள்.

நிலையற்ற இவ்வுலக வாழ்வை முடித்து நிலையான பேரின்ப வாழ்வு பெற்ற அமரர் பாலகிருஷ்ணன் அவர்களது ஆத்மா அவரது இஷ்ட குலதெய்வங்களின் ஆசியோடு அவ்வுலகில் அமைதியுறப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## தேற்றம்

மரணமென ஒன்றுண்டு மன்னுயிர்கட் கென்றும்
மரணமதை யார்தானும் வலிந்தழைப் பதில்லை
இரவுபகல் எந்நேரம் எக்கணத்தி லேனும்
வரலாம் இதுவென்று வகுத்தானே யீசன்.

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டிட்ட பாலகிருஷ்ணன் மண்ணுலகில் வாரார்
ஈண்டிந்த உண்மையினை உணர்ந்தே நாமெல்லாம்
வேண்டாந் துயரென்று வேதனையைத் தவிர்ப்போமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் கண்ணீர்க் காணிக்கைகள்......

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் என்கிற ஆலமரத்தினை தாங்கி நிற்கின்ற விழுதுகளில் ஒரு விழுது உதிர்ந்து விட்டது. ஆம் ....... லயன். பாலா என்று சகல லயன்ஸ் கழக அங்கத்தவர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்ட பாலா மாஸ்டர் எங்களை விட்டு நெடுந்தூரம் சென்றுவிட்டார்.

நிமிர்ந்த நெஞ்சு, நேர் கொண்ட பார்வை, நாவில் சரளமாக நர்த்தனமாடும் ஆங்கிலம், காலில் எப்பொழுதுமே கறுப்பு நிறச்சப்பாத்து என எப்பொழுதுமே கம்பீரமாக லயன்ஸ் கழகக் கூட்டங்களில் வலம் வரும் பாலாமாஸ்டரை இனி எப்போது காண்போம். கழகக் கூட்டங்களில் தனது கருத்துக்களைத் தெளிவாக முன்வைப்பதில் அவரிற்கு நிகர் அவர்தான்.

1987ஆம் ஆண்டு பரிஷ் லயன்ஸ் கழகம் ஸ்தாபிக்கப்படுவதற்கு மூலகாரணமாக இருந்து கழகத்தின் முதலாவது செயலாளராகவும் பணியாற்றியவர். பின் 1991, 1992, 1993 காலப்பகுதிகளில் கழகத்தின் தலைமைப்பொறுப்பேற்று கழகத்தினை மிகச்சிறப்பாக வழிநடாத்திய பெருமகனார், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் எப்பொழுதெல்லாம் இடர்களைச் சந்தித்ததோ அப்போதெல்லாம் அவ்விடர்களைக் களைவதில் முன்னின்று உழைத்த ஒரு ஆபத்பாந்தவர்.

லயன்ஸ் கழகங்களின் அறக்கோட்பாட்டு விதிகளில் இருந்து சிறிதும் வழுவாது ஒரு லயன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இருந்து வழிகாட்டியவர். இன்றைய மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்திலுள்ள இளந்தலைமுறையினரில் பலர் அவரிடம் கல்வி பயின்றவர்கள். அத்துடன் கழகத்தினுள் அவர்களை இணைத்தவரும் அவரே.

எமது லயன்ஸ் கழகத்தின் சேய்க்கழகமான மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தின் ஆலோசகரும் அவரே. அவ் லியோக் கழகத்தின் செயற்பாடுகள் மிகச் சிறப்பாக அமைந்ததிற்கு அவரின் ஆலோசனைகளும் வழிகாட்டல்களுமே காரணம். அவரின் லியோக்கழகச் செயற்பாடுகளிற்கு கிடைத்த வெகுமதி தான். *306B1* மாவட்டத்தின் கீழ் உள்ள சகல லியோக்கழகங்களிற்கும் பொறுப்பாக *District Codinater* பதவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிஷ் லயன்ஸ் கழகம் தனது மூத்த உறுப்பினரான லயன். பாலகிருஷ்ணன் அவர்களைக் கௌரவிக்குமுகமாக தனது *23rd Charter Anniversary Celebration* மற்றும் *24th Installation of Office Bearers* நிகழ்வின் போது அவரையும் அவரது பாரியாரையும் பிரதம விருந்தினராக அழைத்து கௌரவித்திருந்தது. அந்த நிகழ்வில் அவர் உறுப்பினர்களைச் சத்தியப்பிரமாணம் செய்துவைத்த விதம் அங்கு வந்திருந்த லயன்ஸ் கழக பிரமுகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது என்றால் அது மிகையில்லை.

இப்பேர்ப்பட்ட ஒரு பெருமகனை, தலைமகனை இழந்ததையிட்டு பரிஷ் லயன்ஸ் கழக அன்னை தன் கண்ணீர்களைக் காணிக்கையாக்குகிறாள். அந்தத் தலைமகனின் நினைவுகளைச் சுமந்தவண்ணம் அவள் தனது பயணத்தைத் தொடர்வாள்.......

**தலைவர், செயலாளர்,**
**பணிப்பாளர் சபை, உறுப்பினர்கள்.**
**மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்**
**மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம்**

## நற்சிந்தனை

உனக்குச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. நாங்களெல்லாம் தேச சந்நிதானத்தில் இருக்கிறோம். இது ஒரு பெரும் சத்தியம், யாவும் இருந்தபடியே நடந்துவருகின்றது. கிலேசமோ, அன்போ, பகையோ இவை யாவும் பகவானுடைய விளையாட்டு. இவை என்றும் இப்படியே, நாமும் அப்படியே. பிறப்பைப்போல இறப்பு புகழைப்போல இகழ், நன்மையைப் போலத் தீமை, முழுதும் உண்மை, முன்னிலை இன்றித் தன்னிலையில் யாவும் இயங்காமல் இயங்கு. முழுவைக்காணோம்.

அதுதான் சுற்றிச் சுற்றிச் சுப்பருடைய கொல்லை.

**யோக சுவாமிகள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## லயன் சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்

(B. Sc, Dip - in - Ed

*முன்னாள் பிரதி அதிபர் மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஆசிரியர் கொக்குவில் இந்துககல்லூரி, ஆசிரியர் மானிப்பாய் மகளிர் கல்லூரி, முன்னாள் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட இணைப்பாளர்*



**அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றேன்.**

ஊருக்கே உத்தமனாய் கருணைமிகு ஒளிவிளக்காய் வாழ்ந்து
பாருக்கே வழிகாட்டிய பாலகிருஷ்ணா உனதருமை மக்களையும் மருகரையும்
ஊரவர்களையும் தவிக்கவிட்டு விண்ணுலகம் சென்றதேனோ!
இப்பூவுலகில் வாழ்ந்த வாழ்க்கையினி போதுமெனச் சிந்தித்து ஏன்
பாருலகு சென்றனையோ! பதைக்குதைய்யா - எம் உடம்பு வெடிக்குதையா எம்மிதயம்
துடிக்குதைய்யா எம்முள்ளம்! துவழுதையா எம்மனது!
மானிப்பாய் பரிஸ் லயன் கழகத்தின் முன்னாள் தலைவராகி நின்ற சீமானே!
லயன்ஸ் கழகத்தின் வளர்ச்சிப்பாதையில் முன்னணியில் திகழவைத்தவரே!
எமது குடும்பத்தினர் தலைநிமிர்ந்து நிறக்க வேண்டுமென
வழி காட்டியாய் நின்று வளர்ச்சிப் பாதையை திறந்து விட்ட ஐயனே!
எனது உற்ற சகோதரியை டாக்டராக்கிய பெருமைக்குரியவரே!
எனது சகோதரர்களை பொறியியலாளராகவும், கணக்காளராகவும் உயர் நிலைக்கு
ஆளாக்கி எமது குடும்பம் தலை நிமிர்ந்து வாழ வரம் தந்த தெய்வத்திருமனே!
இன்றோ எம்மையெல்லாம் துடிதுடித்து கதறியழ வைத்துவிட்டு சென்றனையோ- ஐயா!
எம் ஓலக்குரலைக்கேட்டு ஓடிவர மாட்டாயா எமதருமை ஐயாவே!
தேடுகிறேன் தேடுகிறேன் உம்மைக் காண முடியாது கதறுகிறேனையா.

தோற்றம்: **24-04-1927**
மறைவு: **10-10-2010**

மலரகம், கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

சமூக சேவையாளன்
**லயன். கே. எஸ். துரைரட்னம்**
முன்னாள் தலைவர்,
மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மனம் நெகிழ்ந்து அஞ்சலி செய்கிறோம்
கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள்
ஆசிரியரும் எங்கள் ஆசானுமாகிய

அமரர்

## சொர்ணலிங்கம் பாலகிருஸ்ணன்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த ஆசிரியரும், கல்லூரியின் விளையாட்டுத்துறையை மேம்படுத்தியவருமாகிய
அமரர்
சொர்ணலிங்கம் பாலகிருஸ்ணன்
அவர்களின் மறைவுச் செய்தி, அவர் அரவணைப்பில் வளர்ந்த கல்லூரி மைந்தர்களாகிய எமக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. எமது கல்லூரியின் மூத்த ஆசிரியரான இவர் முப்பது வருடங்களுக்கு மேலாக எமது கல்லூரியில் சேவையாற்றியதுடன் கிரிக்கெற் விளையாட்டுத் துறைக்கு உயிர் கொடுத்து விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியராக (Prefect of Games) திகழ்ந்தார். இவரது விலங்கியல் பாட கற்பித்தல் திறமையால் பலர் வைத்தியத் துறையில் புகழ் பூத்து நிற்கின்றனர்.

அன்னாரின் மறைவினால் துயர் கொண்டிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து கொண்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம். (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## லயன். சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்

(முன்னாள் பிரதி அதிபர், மானிப்பாய் இந்துக்கல்லூரி, முன்னாள் ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி)



நவாலியூர்
நாடக கலையரசனின் வாரிசு பால
கிருஷ்ணன் ஆசான் மானியம் பதியில் மேன்மையுற
வாழ்ந்த செம்மல் நூற்றாண்டு விழாக் கண்ட
புகழ்பூத்த இரு கல்லூரிகளிலும் நல் ஆசானாய்
கல்விக் கண்ணைத் திறந்தவர் விழிமூடினரோ!
Cricket பந்துவீச்சு, துடுப்பாட்ட நுணுக்கங்களை
கற்றுத்தந்த கரங்கள் ஓய்ந்ததோ!
உங்கள் கம்பீர நடை தளர்ந்ததோ!
ஆலயங்களைத் தேடிவரும் நல் இதயம்
துடிக்க மறந்ததோ!
நீங்கள் நேசித்த உள்ளங்கள்
உங்களை நேசித்த உறவுகள் பரிதவிக்க
சென்ற மாயமென்ன?
உங்கள் பிரிவால் துயருறும் அன்பு மனைவியுடன்
நாமும் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

**அஞ்சலிக்கும், தயாபரன் - குமுதினி.**
**கலையரசு சொர்ணலிங்கம் வீதி,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

12.10.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் மாலை

## "கண் கலங்கி துயரில் பங்கேற்கின்றோம்"

லயன். சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்
(B.Sc Dip.in.Ed)
(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், மானிப்பாய் இந்துக்கல்லூரி,
முன்னாள் ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி, சர்வதேச லயன்ஸ் கழகங்களின்
மாவட்டம் 306 - B1 முன்னாள் மாவட்ட இணைப்பாளர்)
ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய 9ம் திருவிழா உபயகாரரும்,
நவாலியைப் பிறப்பிடமாகவும், லோட்டன் வீதி மானிப்பாயை வதிவிடமாகவும்
கொண்டு வாழ்ந்து அமரத்துவமெய்திய

மண்ணில்
24.04.1927



விண்ணில்
10.10.2010

## கலையரசு சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்கள்

நேர்மை தவறாதவராகவும், சொல்வாக்குத் தவறாதவராகவும் அன்பும் பண்பும் நிறைந்த சிறந்த மாமனிதராகவும் அவரை நாடி வந்து எந்த உதவி கேட்டாலும் அவைகளைத் தட்டிக்கழிக்காமல் செய்து கொடுப்பவராக மக்கள் மனதில் இடம்பிடித்த ஒரு பெருந்தகையாளராக விளங்கியவர் திரு. பாலகிருஸ்ணன் அவர்கள்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்கியவர். அத்துடன் நாகலிங்கம் கந்தையாவாகிய எனக்கு மூத்தநயினார் கோயிலில் 9ம் திருவிழா செய்வதற்கு சம உரிமை கொடுத்தவர்.

அவரது துணைவியார் திருமதி. பாலகிருஸ்ணன் அவர்களின் அன்பான சிறந்த பராமரிப்பில் வாழ்ந்து வந்த இவரது இழப்பு அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் எங்கள் குடும்ப நண்பனாகிய திரு. பாலகிருஸ்ணன் அவர்களின் மறைவையொட்டி நானும் எனது மனைவி பிள்ளைகளும் மிகுந்த அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம். அவரின் ஆத்மா சாந்தியடைய ஆனைக்கோட்டை மூத்தநயினார் திருவருளை நாடி நிற்கிறோம். அத்துடன் இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது அன்பு மனைவி, சகோதரர்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**... நாகலிங்கம் கந்தையா குடும்பத்தினர்**
**சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.**

**கனடா 10.10.2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## லயன் சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்

(பட்டயச் செயலாளர், மூத்த உறுப்பினர், லியோக் கழக ஆலோசகர்)

**மண்ணில்** 22—04—1927

**விண்ணில்** 10—10—2010

அன்பின் பிறப்பிடமாய் அரவணைக்கும் தெய்வமாய்
பண்பினில் சிறந்தவராய் பாரினிலே நீர் வாழ்ந்தீர் - ஐயா
சேவை பல செய்து பாராட்டுப் பல பெற்றீர்
அதுவே உமது உயிரும் உயிர் மூச்சும் கூட!

லயன்ஸ் கழகத்தின் ஆரம்ப உறுப்பினராய்
மானிப்பாய் பரிஷ் லயன்ஸ், லியோக் கழகத்தின்
சேவைபல மக்களுக்குப் பெற்றுத் தந்தீர்
சேவை பெற்ற மக்கள் உம் பிரிவால் கலங்குகின்றனர்

கலங்கரை விளக்காய் பிறருக்கு வழிகாட்டினீர்கள் - ஐயா
இளைஞர்களிடத்தில் தலைமைத்துவம் சேவை மனப்பான்மையை
ஏற்படுத்த வேண்டும் என்று பேரவாக் கொண்டிருந்தீர்கள்
அதற்காகவே நீங்கள் மானிப்பாய் பரிஷ் லியோவின்
ஆலோசகராகினீர்கள் ஐயா!
வழிகாட்டலின்றித் தவிக்கின்றோம் இளைஞர்கள் நாம்.

எண்பத்துமூன்று வயதிலும் உங்களுக்கு சேவை நினைப்புத்தான்
எடுப்பான தோற்றம் உங்கள் ஆளுமையை உணர்த்தியது
சொர்க்கம் நரகம் என்றொன்று உண்டெனில் சத்தியமாய்
சொல்லுகின்றோம் உமக்கு சொர்க்கம் தான்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

LEO

***மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம்***

மானிப்பாய்,
14-10-2010

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் லயன் சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்

(பட்டயச் செயலாளர் - மூத்த உறுப்பினர் - லியோக் கழக ஆலோசகர்)

தோற்றம்
22 - 04 - 1927



மறைவு
10 - 10 - 2010

ஆரம்ப கால உறுப்பினராய்
அன்புடன் எமை அரவணைத்து
"அ" முதல் "அகரம்" வரை
அரிமாக் கோட்பாடுகளை
அறிவித்த ஆசானின்
ஆத்மசாந்தி வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் அங்கத்தவர்கள்
மானிப்பாய் கோவிற்பற்று அரிமாக் கழகம்
மானிப்பாய் கோவிற்பற்று லியோக் கழகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
22-04-1927

உதிர்வு
10-10-2010

## அமரர்
## லயன் சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்

(பட்டயச் செயலாளர், மூத்த உறுப்பினர், லியோக் கழக ஆலோசகர்)

ஆரம்ப கால உறுப்பினராய்
அன்புடன் எமை அரவணைத்து
"அ" முதல் "அகரம் வரை
அரிமாக் கோட்பாடுகளை
அறிவித்த ஆசானின்
ஆத்மசாந்தி வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

We Serve

*தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் அங்கத்தவர்கள்*
*மானிப்பாய் கோவிற்பற்று அரிமாக் கழகம்*
*மானிப்பாய் கோவிற்பற்று லியோக் கழகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும்,
விளையாட்டுத்துறைக்கு மெருகூட்டியவருமான

## அமரர்
## சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்

எமது கல்லூரியின் 1952ஆம் ஆண்டு ஆசிரியராகக் கடமையேற்று வந்த சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்கள் சிறந்த விலங்கியல் ஆசிரியராகவும், எமது கல்லூரி துடுப்பாட்ட வீரர்களுக்குப் பயிற்றுநராகவும் விளங்கி எம்கல்லூரியின் துடுப்பாட்ட வளர்ச்சிக்கு அரும் பாடுபட்ட பெருந்தகையாவார். கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராகவும் (Prefect of Games) கடமையாற்றிக் கல்லூரி விளையாட்டுத்துறையின் பெருவெற்றிகளுக்கும் காரணகர்த்தாவாகத் திகழ்ந்தவராவார். 30 வருடகாலமாக எமது கல்லூரிக்காக அரும்பெரும் சேவையாற்றிய அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானி. இந்துவின் கண்ணீர் அஞ்சலி



## சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)

மானி. இந்துவின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்து மாணவச் செல்வங்களை கல்வியுடன் விளையாட்டிலும் கல்லூரியை மேம்படுத்திய அமரர் சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு பேரதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
**யாழ்/மானிப்பாய் இந்துக் கல்லூரி.**

## சிந்திக்க சில துளிகள்

1. கடமைகள் நம்முடையவை நிழ்வுகள் கடவுளுடையவை.
2. மனம் மலையைக் கூடப் பெயர்க்கும் சக்தியுடையது.
3. மரண பயம் தான் ஒழுக்கத்தின் ஆரம்பம்.
4. வேகமாக முடிவெடுப்பதை விட விவேகமாக முடிவு செய்.
5. நம்பிக்கையுடையவர் ஒவ்வொரு குழப்பத்திலும் ஒரு நல்ல வழியைக் காண்கிறான்.
6. மௌனமாக இருக்கத் தெரியாதவனுக்கு நன்றாகப் பேசவும் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் அகவல்

## காப்பு

**அற்புதவி நாயகர்தம் ஆசிரியர் பாவுரையைச்**
**சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே முற்படுசீர்**
**சொற்கொருளெல் லாங்கடந்து தூயதாம் மெஞ்ஞானமிகு**
**கற்பக விநாயகன்றான் காப்பு**

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசைப் பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாராக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்டமுப் புரிநூலும் திகழ்ஒளி மார்பும்
சொற்பதங்கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுதென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்து எனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்தி
குண்டலி அதனில் கூடிய அசைவை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின முண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனி தெனக் கருளி
என்னை அறிவித் தெனக் கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளியிரண்டுக் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின்னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக்கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தென்னை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

**விநாயகர் அகவல் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The history of Cricket

The game of cricket is the second most popular game in the world, second only to soccer. Cricket appears to have an eventful and colorful history, although the exact origins of the game are unknown. As far back as the 1300's, a mention of the game "creag" is found. However it is unclear whether this is the beginnings of modern – day cricket. The name "cricket" may have come from the word "cric". The word cric stood for the hooked staffs carried by Shepards. These may have been the first cricket bats. Cricket in its early days in England was considered a child's game, not to be played by serious adults.

In 1598 there was a written record of a game called "creckett" or "cricket". This may be the first recorded mention of the game that is played today. By 1611 cricket had become an adult game. Considered illegal and immoral, two men were arrested for playing the game rather than going to church. More and more arrests were made as the game grew in popularity.

At the end of the English Civil War in 1648, the new government clamped down on recreational cricket that was played on Sundays. In these days cricket was played mostly by the working class and Sunday was their only opportunity to play. Interest in the sport seemed to diminish. As the years progressed, cricket once again regained popularity as a betting game. In the year 1688 the Puritan government of England was gone and the Monarchy was in power again. Cricket was favored by the government and regained some respectability. There were still huge problems in the world of cricket however. Betting and rioting marred the game. Around the year 1784 a London magistrate deemed cricket to be "respectable" even though there were still problems with wagering.

Finally in the year 1788 the "Laws of Cricket" were born. The Laws were written by the Marylebone Cricket club. Except for some minor revisions, these laws are still adhered to in present day



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cricket. One notable change was in 1864 when over arm bowling was first used legally. Cricket is the only sport today that has laws instead of rules. Gaining even more respectability in the late 1700s, cricket became the game of "gentlemen". The Laws of Cricket were used for play in England and the Eastern United States. These laws covered the length of the pitch, the distance from the pitching crease to the bowling crease, wicket size, and ball weight.

The cricket fields were leveled and manicured in the 1800's. Up until this time the fields were rough and bumpy. South Africa and Australia began to play cricket seriously during this time. In the year 1844 the first international game of cricket was played in the state of New York in the United States. This match was played between the United States and Canada. Later, in 1877, England travelied to Australia for the first international test match. The match was played in Melbourne Australia. The Australians won the match by 45 runs.

A few years later in 1882, Australia again beat England. It was a close match with Australia winning by 8 runs. This prompted an English writer to publish an obituary for English cricket. The obituary pronounced it "dead". It went on to say that the body would be cremated and that the ashes would be spread over Australia. The next summer England played another series against Australia. This was dubbed by the press as an English endeavor to "reclaim the ashes". A small trophy filled with ashes was made and given to the British Captain. To this day, all test matches between England and Australia are said to be played "for the ashes"

In the year 1900 cricket made its first and only appearance in the Olympics. The match was between France and Britain. Most of the French players came from the British Embassy in France, so mostly British players played the match. Britain won the match and the gold



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

medal. Today there is a renewed interest in cricket becoming an Olympic game.

The ICC was formed in 1909. The Imperial Cricket Conference was formed to govern the laws of cricket. The ICC is known today as the International Cricket Conference. The founding countries of the ICC were England, South Africa, and Australia.

The years 1932 and 1933 saw the laws of cricket being tightened. English players were throwing short – pitched balls at the Australian batters in an attempt at intimidation. England won this series, but ill feelings still exist between Australian and English players because of this series.

In the 1960's some English teams began playing a shortened version of cricket that allowed a match to be completed in only one day. Up until this time the average cricket match could last up to five days. Some fans and players felt this shortened form of cricket to be an insult to the game, so it was not widely accepted by traditional cricket fans. The first one – day international match was played in Melbourne, Australia in 1971. This match prompted the ICC to organize the "Cricket World Cup" to be played every four years. These matches are strictly one – day matches.

In 1981 the ICC banned underarm bowling as a result of a match between New Zealand and Australia. Australian captain Greg Chappell ordered his brother Trevor to use the underarm bowling technique to stop New Zealand from winning a match. Greg's actions angered many in the cricketing community prompting the change.

Today cricket remains a well-loved sport. Some young men in Australia and England grow up hoping to one day "play for the ashes". It is a sport steeped in tradition and its fans are loyal. Although the history of cricket was rocky at times, it's a solid sport that will be around for years to come.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Cricket

Sports are as necessary as our studies. Anything that can change man from the monotony way of life is sports. The advantages of sports are immense. They must be conducted in the right spirit. Sports not only look after our health but also make us into good human beings. They help to develop the qualities of our head and heart and make us good citizens. We should not start to think that we can win every game but realize that winning and losing are just two sides of the same coin. We must accept victory and defeat with the same frame of mind.

As a cricket coacher of leading colleges in the north Manipay Hindu College and Kokuvil Hindu College, I have a lot to say about Cricket. Cricket has become a very popular game in the world. Specially India that has the second largest population in the world is crazy over cricket. Cricketers are rated as God there. When I was coaching at the colleges I always stressed that "practice makes you perfect" players should have dedication and application and of course practice to do well in the matches. Obeying the rules and regulations of the game is important. We must accept the umpires decisions though they may be sometimes wrong and bad for the team. Cricket has become a world game and taken the form of a global mania. This was originally a game of England and then followed by Australia more than 100 test matches have been played between. England and Australia. Australia produced the legend of world cricket Sir Donald Bradman. Now cricket is played in many countries including SriLanka.

Remember Sri Lanka won the world cup in 1996 Muthaiya Muralitharan and Sachin Tendulkar are most dynamic record breaking cricketers from Asia.

I always love to see students, involve themselves in cricket and other sports because they become smart and healthy inviduals and also balanced human beings with great qualities. A sportsman can be spotted out from among hundreds. Let's hope sports activities should continue to put their efforts on human life.

(மேற்படி துடுப்பாட்டம் சம்பந்தமான கட்டுரையானது அமரர். லயன் சொ. பாலகிருஷ்ணன் அவர்களால் ஏற்கனவே எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்டதை மீள் பிரசுரம் செய்கின்றோம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த நன்றிகள்

அன்பாலும் பண்பாலும் நல்வழிகாட்டி வாழ்வின் இலக்கண இலக்கியமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் லயன். சொல்ணலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்கள் சுகயீனம் உற்ற வேளையில் சிகிச்சையளித்த மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை மருத்துவ மேலதிகாரிக்கும், மருத்துவர்களுக்கும், தாதிமாருக்கும், யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவர்களுக்கும், தாதிமாருக்கும், மரணச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கடிதமூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், மாலைகள் சாத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும், இரங்கலுரை நிகழ்த்தியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறி எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும், இந்நினைவு மலரினை அச்சிட்டுத் தந்த றூபன் பதிப்பகத்தாருக்கும், மேலும் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகளிலும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொண்டவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியினை நவில்கின்றோம்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்,
இலங்கை



இங்ஙனம்
குடும்பத்தினர்.

# வம்சா

★ லோட்டன் கனகரட்ணம் + ★ செல்லம்மா

- ★ செல்லையா
- ★ சுவாமிநாதன்
- ★ அழகம்மா
- ★ அன்னரட்ணம்
- ★ நவரட்ணம்
- ★ கலையரசு சொர்ணலிங்கம் + ★ சிவபாக்கி
  - லலிதா ✠
  - Dr. சாரத
  - ★ பாலகி
- ★ சிவபாக்கியம்
- ★ துரைசாமி
- ★ அன்னரட்ணம்
- ★ இராஜலட்சுமி
- ★ தேவராஜா
- ★ இரத்தினமணி
- ★ ஞானமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்சாவழி

★ சின்னத்தம்பர் + ★ அன்னமுத்து

- ★ செல்லமுத்து
- ★ அழகையா
- ★ இராஜரட்ணம் + ★ இரத்தினமணி
  - காராளசிங்கம்
  - அன்னலட்சுமி

சிவபாக்கியம்

ிதா ✗

Dr. சாரதா

பாலகிருஷ்ணன்

★ அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது. எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.






ரூபன் பிறின்டேர்ஸ்,
ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org